PUBLIC DEFENDER'S OFFICE

pdo.mlaw.gov.sg

PUBLIC DEFENDER'S OFFICE



வழக்கறிஞர் தேவைப்பட்டாலும்,
அதற்குப் போதிய பணவசதி இல்லையா?

பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர்
அலுவலகத்தில் குற்றவியல் சட்ட
உதவிக்கு விண்ணப்பம் செய்யுங்கள்

குற்றவியல் சட்ட உதவி
பற்றிய மேல்விவரங்களுக்கு
ஸ்கேன் செய்யவும்

MINISTRY OF LAW
SINGAPORE

# பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அலுவலகம் பற்றிய மேல் விவரங்கள்

பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அலுவலகம், குற்றவியல் சட்ட உதவி வழங்குவதன்மூலம் பண உதவி தேவைப்படுவோர்க்கு நீதி கிடைக்கத் துணை புரியும்.

சட்ட அமைச்சின்கீழ் ஒரு பிரிவாகச் செயல்படும் இந்த அலுவலகத்தில் முழுநேர அதிகாரிகள் இருப்பார்கள். பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் சட்டம் 2022-ன்கீழ் பிரதிவாதி அரசாங்கத் தலைமை வழக்கறிஞர் தனது கடமைகளை நிறைவேற்ற அதிகாரிகள் துணை புரிவார்கள்.

மரண தண்டனை விதிக்கப்படாத குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் அல்லது மேல்முறையீட்டைத் தாக்கல்செய்ய விரும்பும் வசதி இல்லாத சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும், வழக்கறிஞரை/நியமிப்பதற்கு, குற்றவியல் சட்ட உதவிக்கு அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். பணவசதிச் சோதனை, தகுதி நிபந்தனைகள் இரண்டிலும் விண்ணப்பதாரர்கள் தேறவேண்டும். அதோடு, குற்றவியல் சட்ட உதவிக்குத் தகுதி பெறுகிறார்களா என்பதை மதிப்பிடுவதற்குமுன், பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டியிருக்கலாம்.

## எங்களை அணுகுங்கள்

**சட்ட அமைச்சு சேவை நிலையம்**
45 மெக்ஸ்வெல் சாலை
#07-11 த யுஆர்ஏ சென்டர் (ஈஸ்ட் விங்)
சிங்கப்பூர் 069118

**செயல்படும் நேரம்**
திங்கள் முதல் வெள்ளி, காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை (கடைசி வரிசை எண் மாலை 4.30 மணிக்கு வழங்கப்படும். கூட்டத்தைத் தவிர்க்க, பொதுமக்கள் காலை 8.30 மணிக்கும் காலை 11.00 மணிக்கும் இடையில் சேவை நிலையத்திற்கு வருகையளிப்பது நல்லது.)

வார இறுதி நாட்களிலும் பொது விடுமுறை நாட்களிலும் மூடப்பட்டிருக்கும்

**அரசு நீதிமன்றம் (HELP நிலையம்)**
1 ஹாவ்லக் ஸ்குவேர்
#B1-18 அரசு நீதிமன்றம்
சிங்கப்பூர் 059724

**செயல்படும் நேரம்**
திங்கள் முதல் வெள்ளி,
காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை,
பிற்பகல் 2.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**இணையம்வழி தகவல்**
https://go.gov.sg/contactminlaw

**தொலைபேசி எண்**
1800-225-5529

**செயல்படும் நேரம்**
திங்கள் முதல் வெள்ளி, காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை
வார இறுதி நாட்களிலும் பொது விடுமுறை நாட்களிலும் மூடப்பட்டிருக்கும்

# குற்றவியல் சட்ட உதவிக்கு விண்ணப்பம் செய்யும் வழிமுறை

## 1 நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்

**A.** சிங்கப்பூரர் அல்லது நிரந்தரவாசி
**B.** ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது நீதிமன்றத்தில் மேல்முறையீட்டைத் தாக்கல்செய்ய/தற்காக்க விரும்புபவர்
**C.** பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் சட்டத்தின் கீழ் இடம்பெறும் குற்றச்செயல்களை எதிர்நோக்குபவர்
**D.** உங்களைப் பிரதிநிதிக்க வழக்கறிஞர் இல்லாதவர்
**E.** குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் (PCHI) கடந்த 12 மாதங்களில் $1,500 அல்லது அதைவிடக் குறைவாக இருக்கும் நபர்



## 2 ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்துங்கள்

உங்கள் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யும்போது,
(a) நீதிமன்றப் பத்திரங்கள் ,மற்றும்
(b) உங்கள் நிதிநிலை தொடர்பான அனைத்து தகவல்களையும்
நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். (நீங்கள் தயார்ப்படுத்த வேண்டிய தகவல்களுக்கு 'ஆதாரப் பத்திரங்களின் பட்டியலைப்' பாருங்கள்.)

நீங்கள் தேவையான பத்திரங்கள் அனைத்தையும் தாக்கல் செய்யாவிட்டால், உங்கள் விண்ணப்பம் தாமதமடையும் அல்லது காலக்கெடுவைக் கடந்துவிடும்.



## 3 விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யுங்கள்

**A. <u>இணையத்தின் மூலமாக</u>**
**https://go.gov.sg/applypdo**
இணையத்தளத்தில்
(சிங்பாஸ் உட்பதிவு அவசியம்.)

**B. <u>நேரில்</u>**
i. **சட்ட அமைச்சின் சேவை நிலையம்**
ii. **அரசு நீதிமன்றம் (HELP நிலையம்)**

குறிப்பு: நீங்கள் காவலில் அல்லது சிறையில் இருந்தால், சிங்கப்பூர் சிறைச் சேவை மூலம் நேரடியாக விண்ணப்பம் செய்யுங்கள்.

## 4 இரண்டு பேட்டிகள் நடத்தப்படும்

**A. <u>பணவசதிச் சோதனை</u>**
தனியார் வழக்கறிஞரை நியமிப்பதற்கு உங்களிடம் போதிய வசதி இல்லை என்பதை உறுதி செய்வதற்கு.

**B. <u>தகுதிச் சோதனை</u>**
பின்வருபவற்றை உறுதி செய்வதற்கு:
i. குற்றத்தை ஒப்புக்கொள்ள வழக்கறிஞர் உங்களைப் பிரதிநிதித்தால் நீங்கள் பயனடைவீர்களா;
ii. உங்கள் வழக்கை நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு ஏற்புடைய காரணங்கள் இருக்கிறதா அல்லது
iii. மேல்முறையீட்டு விண்ணப்பத்தைத் தாக்கல்செய்ய/தற்காக்க ஏற்புடைய காரணங்கள் இருக்கிறதா

இந்தப் பேட்டிகள் தொலைபேசிவழி நடத்தப்படும். உங்களைப் பேட்டிகாண ஏற்பாடு செய்யப்படும் நேரத்தில் உங்களால் பதிலளிக்க முடிவதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

## 5 தகவல் பெறுங்கள்

உங்கள் விண்ணப்பத்தின் முடிவை மின்னஞ்சலில்/தபாலில் பெறுவீர்கள். உங்கள் விண்ணப்பம் ஏற்கப்பட்டால், பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நீங்கள் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

தகுதிபெறும் வழக்குகள் எஸ்ஜி பொதுநலச் சட்டப்பணி அமைப்பிடமும் பரிந்துரைக்கப்படலாம். அவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை எவ்வளவு என்பதை அவர்கள் தெரியப்படுத்துவார்கள்.



## 6 பங்களிப்புத் தொகையைச் செலுத்துங்கள்

உங்களுக்குக் கொடுக்கப்படும் காலகட்டத்திற்குள் பங்களிப்புத் தொகையை நீங்கள் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்களுக்கு உதவி வழங்கப்படாது.

## 7 வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்

உங்கள் வழக்கைக் கையாள, பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அல்லது குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தின்கீழ் தொண்டூழிய வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்.



## ஆதாரப் பத்திரங்களின் பட்டியல்

நீங்கள் விண்ணப்பம் செய்யும்போது, பின்வரும் ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்துங்கள்:

### நீதிமன்றப் பத்திரங்கள்

- ஜாமின் பத்திரம்
- குற்றப் பத்திரிக்கை (கள்)
- எச்சரிக்கை வாக்குமூலங்கள்
- அண்மைய நீதிமன்ற மனுச் சீட்டு
- நீதிபதியின் தீர்ப்புக்கான காரணங்கள் (மேல்முறையீட்டைத் தாக்கல்செய்வதாக அல்லது தற்காப்பதாக இருந்தால்)
- வேறு ஏதேனும் நீதிமன்றப் பத்திரங்கள், அல்லது மருத்துவ அறிக்கைகள்

### நிதிநிலை பத்திரங்கள்

- அண்மைய வங்கி அறிக்கை (கள்) அல்லது கடந்த 3 மாதங்களின் பரிவர்த்தனைகளைத் தெளிவாகக் காட்டும் வங்கிக் கணக்குப் புத்தகம் (கூட்டு மற்றும் தனிப்பட்ட கணக்குகள் இரண்டும்)
- கடந்த 12 மாதங்களின் சம்பளச்சீட்டு (மத்திய சேம நிதி சந்தா இல்லாமல் வேலை செய்தால்)
- வேலையையும் வருமானத்தையும் காட்டும் வேறு ஆதாரப் பத்திரங்கள் (சொந்தத் தொழில் செய்பவராக இருந்தால்)
- மத்திய வைப்பகத்தின் (CDP) அண்மைய கணக்கு அறிக்கை
- ரொக்க அல்லது ஒப்படைப்பு மதிப்புள்ள அனைத்து முதலீடுகளின் அண்மைய அறிக்கைகள் (உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பங்குகள், நிலை வைப்புகள், யூனிட் டிரஸ்ட், சிங்கப்பூர் சேமிப்புப் பத்திரங்கள், மற்ற முதலீட்டுத் திட்டங்கள் போன்றவை)
- அடையாள அட்டை (நேரில் செய்யும் விண்ணப்பங்களுக்குப் பொருந்தும்)

## தகுதி நிபந்தனைகள்

| | |
|---|---|
| வயது | • 21 வயது மற்றும் அதற்குமேல்<br>• நீங்கள் 21 வயதுக்குக் குறைவானவராக இருந்தால், உங்கள் பெற்றோர் அல்லது காப்பாளர் உங்கள் சார்பில் குற்றவியல் சட்ட உதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும் |
| குடியுரிமை | • சிங்கப்பூரர் அல்லது நிரந்தரவாசி |
| சொத்துரிமை | • ஒரே ஒரு சொத்தின் உரிமையாளர்<br>• சொத்தின் ஆண்டு மதிப்பு $13,000 க்கு மேல் இருக்கக்கூடாது |
| குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் (PCHI) | • குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,500 மற்றும்<br>• அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்<br>சராசரி PCHI = (வேலை செய்யும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கடந்த 12 மாதங்களில் சம்பாதித்த மொத்த வருமானம்) / (குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை x 12) |
| சேமிப்பு மற்றும் மத்திய சேம நிதி அல்லாதவை முதலீடுகள் | • $10,000 க்கு மேல் இருக்கக்கூடாது (60 வயதுக்குக் குறைவானவராக இருந்தால்)<br>• 60 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், $40,000 க்கு மேல் இருக்கக்கூடாது |
| குற்றச்செயலின் வகை | • பின்வருபவை அல்லாத வேறு குற்றச்செயல்கள்:<br>+ மரண தண்டனைக்குரிய குற்றச்செயல்<br>+ ஒழுங்கமைப்பு சார்ந்த குற்றச்செயல்கள்<br>+ (i) சூதாட்டம் மற்றும் பந்தயப்பிடிப்பு, (ii) குற்றச்செயல் கும்பல்கள் (iii) பயங்கரவாதம் தொடர்பான குற்றச்செயல்கள்<br>+ தனிநபர்களால் தொடுக்கப்படும் வழக்குகள்<br>உள்ளடங்காத குற்றச்செயல்களின் முழுப் பட்டியலை go.gov.sg/pdoscope இணையத்தளத்தில் காணலாம் |
| மற்ற நிபந்தனைகள் | • ஏற்னகவே குற்றம் சாட்டப்பட்டு / குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் தீர்ப்பு விதிக்கப்பட்டுவிட்டது<br>• வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்படவில்லை<br>• தகுதித் சோதனையில் தேர்ச் பெற்றிருக்க வேண்டும் |

## எனக்கு எத்தகைய உதவி கிடைக்கும்?



பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அலுவலகம், எஸ்ஜி பொதுநலச் சட்டப்பணி அமைப்புடன் (முன்பு சட்ட சங்கத்தின் பொதுநலச் சட்டப்பணி சேவைகள் என்றழைக்கப்பட்டது) சேர்ந்து, சிங்கப்பூரில் குற்றவியல் சட்ட உதவியைக் ஒன்றாக வழங்கும்.

குற்றவியல் சட்ட உதவிக்கு நீங்கள் தகுதிபெற்றால், உங்களுக்கென ஒரு பிரதிவாதி அரசாங்க வழக்கறிஞர் அல்லது குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தின்கீழ் (எஸ்ஜி பொதுநலச் சட்டப்பணி அமைப்பு நிர்வகிப்பது) தொண்டூழிய வழக்கறிஞர் நியமிக்கப்பட்டுவார். அவர் நீதிமன்றத்தில் உங்களைப் பிரதிநிதிப்பார்.